UNDER SECTION 173-BNSS

BNSS பிரிவு 173-கின் கீழ்

FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8167247

05/AC/2026

1. District : மாவட்டம் கரூர் PS: வே.கு.த. பிரிவு காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No.: மு.த.அ. எண் Date: நாள் 26.07.2026

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: ACT 1988 AS AMENDED IN Sections பிரிவுகள்: 7, 7A/W 12

(iii) Act சட்டம்: 2018 AND BNSS Sections பிரிவுகள்: 106.

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 25.07.2026 Date to : நாள் வரை 17.00 மணிமுதல்

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 21.00 மணி வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.07.2026 Time : நேரம் 14.00 HRS

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 26.07.2026 Time : நேரம் 14.30 HRS

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 25 கி.மீ வடக்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி 1, ஈ.ரோடு ரோடு கந்தம்பாளையம் முனியப்பன் கோவில் எதிரில் உள்ள சாலையில் வைத்து. 2, புகளூர் நகராட்சி ஆணையர் அலுவலகம். கரூர் - மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G. பாலமுருகன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கணேசன்.

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1983 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் வருவாய் ஆய்வாளர் (g) Address : முகவரி மண்மங்கலம் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மண்மங்கலம் வட்டம். கரூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1, திரு. C. வெங்கடாசலபதி ஆணையர் புகளூர் நகராட்சி கரூர் மாவட்டம்.
2, திரு. S. சுரேஷ்குமார், துப்புரவு பணியாளர்/சானிட்டரி புகளூர் நகராட்சி.
3. திரு. A. சூரியக்குமார் த/பெ. ஆறுமுகம் நந்தவனத்தெரு, ஜேளாயுதம் பாளையம் கரூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால்'/ தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கணினியின் நடவடிக்கை கையேடு காண்க

இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed P. தாமோதரன் Rank ஆய்வாளர் to take up the Investigation / Refused Investigation / transferred to PS மேற்கு மாம்பலம் குற்றப் பிரிவு சென்னை .....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

26/07/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

26/7/26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

26.07.2026 AT. 14.45 HRS.

Name: பெயர் ந. சாதிநாதன்
Rank: நிலை ஆய்வாளர் No. எண் .....
மே. த. கு. பிரிவு சென்னை.

Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.05/AC/2026 u/s 7, 7 r/w 12 of The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 and 106 of BNSS 2023.

எதிரிகள்:

1) திரு.C.வெங்கடாசலபதி,
த/பெ.சித்ரவேல்,
ஆணையர்,
புகளூர் நகராட்சி,
புகளூர் வட்டம்,
கரூர் மாவட்டம்.

2) திரு.S.சுரேஷ்குமார்,
த/பெ.சுப்புராமன்,
தூய்மைப்பணியாளர் / எலக்ட்ரிசியன்,
புகளூர் நகராட்சி,
புகளூர் வட்டம்,
கரூர் மாவட்டம்.

3) திரு.A.சூர்யகுமார்,
த/பெ.ஆறுமுகம்,
கதவு எண்.C1, நந்தவனம் தெரு,
வேலாயுதம்பாளையம் & அஞ்சல்,
புகளூர் வட்டம்,
கரூர் மாவட்டம். (தனி நபர்)

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

கரூர் மாவட்டம், புகளூர் வட்டம் புகளூர் நகராட்சி ஆணையர் அலுவலகத்தில் பணிபுரியும் ஆணையர் மற்றும் பணியாளர்கள் அரசு திட்டப்பணிகளை செயல்படுத்தும் ஒப்பந்ததாரர்களுக்கு பகுதி மற்றும் இறுதி பட்டியல் தொகையை வழங்கவும், கட்டிட அனுமதி, மனைப்பிரிவு ஒப்புதல் சம்மந்தமாக பொதுமக்களிடம் இருந்து ஆன்லைன் மூலமும் மற்றும் நேரடியாகவும் பெறப்படும் மனுக்கள் மீது களஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க லஞ்சமாக பணம் பெற்று வருவதாகவும், மேலும், இ-சேவை மையத்திற்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க வரும் பொதுமக்களிடம் விண்ணப்ப கட்டணத்திற்கு மேல் தொகை லஞ்சமாக பெறுவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் 25.07.2026 ஆம் தேதி 17.00 மணிமுதல் 21.00 மணி வரை நடத்திய திடீர் சோதனையின் அடிப்படையில் திரு.G.பாலமுருகேசன், வருவாய் ஆய்வாளர், மண்மங்கலம் பிர்கா, மண்மங்கலம் வட்டம், கரூர் மாவட்டம் 26.07.2026 ஆம் தேதி மதியம் 14.00 மணிக்கு கொடுத்த புகார் மனுவை பெற்று சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை உயர் அதிகாரிகள் மற்றும் சட்ட ஆலோசகர்களிடம் தக்க அறிவுரை பெற்ற பின்னர், இன்று 26.07.2026 ஆம் தேதி மதியம் 14.30 மணிக்கு கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.05/AC/2026 பிரிவு 7, 7 r/w 12 of The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 மற்றும் பிரிவு 106 of BNSS, 2023-ன் கீழ் முதல் தகவல் அறிக்கையில் மார்ஜினில் கண்ட எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

புகார் மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: திரு.G.பாலமுருகேசன், வருவாய் ஆய்வாளர், மண்மங்கலம் பிர்கா, மண்மங்கலம் வட்டம், கரூர் மாவட்டம். பெறுநர்: காவல்

ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கரூர். அய்யா, பொருள் : 25.07.2026-ம் தேதியன்று கரூர் மாவட்டம், புகளூர் வட்டம் புகளூர் நகராட்சி ஆணையர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்ட போது கைப்பற்றிய பணம் ரூ.57,000/- மற்றும் ஆவணத்தை மேல் நடவடிக்கைக்காக ஒப்படைத்தல் - சம்மந்தமாக. பார்வை : திடீர் சோதனையின் போது தயாரிக்கப்பட்ட செயல்முறை நடவடிக்கைகள், நாள் 25.07.2026. நான் 25.07.2026-ம் தேதியன்று அலுவலகத்தில் பணியில் இருந்த போது வட்டாட்சியர், மண்மங்கலம் அவர்கள் என்னிடம் கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குழுவினருடன் இணைந்து திடீர் சோதனை மேற்கொள்ள அரசு சாட்சி தேவைப்படுவதாகவும் அதற்காக என்னை கரூர் ஊ.த.க. பிரிவு அலுவலகத்துக்கு நேரில் சென்று அறிக்கை செய்யுமாறும் கேட்டுக் கொண்டதன் பேரில், நான் மாலை 15.00 மணியளவில் கரூர் ஊ.த.க. பிரிவு அலுவலகத்திற்கு நேரில் வந்து அறிக்கை செய்தேன். அப்போது தாங்கள் கரூர் மாவட்டம், புகளூர் வட்டம் புகளூர் நகராட்சி ஆணையர் அலுவலகத்தில் பணிபுரியும் ஆணையர் மற்றும் பணியாளர்கள் அரசு திட்டப்பணிகளை செயல்படுத்தும் ஒப்பந்ததாரர்களுக்கு பகுதி மற்றும் இறுதி பட்டியல் தொகையை வழங்கவும், கட்டிட அனுமதி, மனைப்பிரிவு ஒப்புதல் சம்மந்தமாக பொதுமக்களிடம் இருந்து ஆன்லைன் மூலமும் மற்றும் நேரடியாகவும் பெறப்படும் மனுக்கள் மீது களஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க லஞ்சமாக பணம் பெற்று வருவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் பேரில் மேற்குறிப்பிட்ட புகளூர் நகராட்சி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளும்போது அரசுதரப்பு சாட்சியாக உடனிருக்குமாறு சொன்னதன் பேரில் தங்கள் காவல் குழுவினருடன் நானும் இணைந்து மாலை சுமார் 15.30 மணியளவில் நிலையம் விட்டுப் புறப்பட்டு சுமார் 16.15 மணிக்கு புகளூர் நகராட்சி அலுவலகம் வந்தபோது புகளூர் நகராட்சி ஆணையர் திரு.C.வெங்கடாசலபதி அவர்கள் இன்று மதிய உணவிற்கு சென்றுவிட்டு இன்னும் அலுவலகம் வரவில்லை என்று கிடைத்த இரகசிய தகவலின் பேரில் நான், காவல் ஆய்வாளர் மற்றும் காவல் குழுவினருடன் ஈரோடு ரோடு கந்தம் பாளையம் முனியப்பன் கோவில் அருகே மாலை சுமார் 16.30 மணிக்கு சென்று அங்கு மேற்படி கோயிலுக்கு எதிர்புறம் உள்ள சாலையில் புறப்படத்தயாராக இருந்த பொலிரோ அரசு வாகனம் TN 47 BV 4281 ஐ நிறுத்தி மேற்படி வாகனத்தின் டிரைவர் இருக்கைக்கு இடதுபுறம் அமர்ந்திருந்தவரிடம் காவல் ஆய்வாளர் என்னையும், என்னுடன் வந்த காவல் குழுவினரையும் அறிமுகம் செய்து கொண்டு அவரது வாகனத்தை சோதனை செய்தபோது அவரது இருக்கைக்கு காலடியில் வைக்கப்பட்டிருந்த V-One லேபிள் கொண்ட கிரே மற்றும் புளு கலர் கொண்ட கம்யூட்டர் பேக்கை சோதனை செய்தபோது அதில் ஒரு காக்கி நிற கவரில் கத்தையாக வைக்கப்பட்டிருந்த பணம் ரூ.40,000/- (500x80) ம் குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் கடந்த வாரம் ஒப்பந்ததாரர்களுக்கு பட்டியல் தொகையை வழங்கியதற்காக அவர்கள் தனக்கு கொடுத்த கமிஷன் தொகை என்றும், அந்த

தொகையை தான் தங்கியிருக்கும் ஈரோடு ரோடு கந்தம் பாளையத்தில் உள்ள தனது அறையில் வைத்திருந்ததாகவும், இன்று சனிக்கிழமை அலுவலக பணி முடித்து இன்று மாலை தனது சொந்த ஊரான இராமநாதபுரத்திற்கு செல்லும் போது எடுத்து செல்ல மேற்படி தான் தங்கியிருக்கும் அறையில் இருந்து எடுத்து வந்து வாகனத்தில் வைத்திருந்ததாக சொன்னார். அதன் பிறகு மேற்படி வாகனத்துடன் நகராட்சி ஆணையர் திரு.C.வெங்கடாசலபதி அவர்களை அழைத்துக்கொண்டு புகளூர் நகராட்சி ஆணையர் அலுவலகத்திற்கு மாலை சுமார் 16.45 மணிக்கு காவல் ஆய்வாளர் மற்றும் காவல் குழுவினர் வந்தபோது அவரவர் இருக்கையில் இருந்த பணியாளர்களிடம் எங்களை அறிமுகம் செய்து கொண்டு, தொடர்ந்து அனைவரையும் அவரவர் இருக்கை பணியை தொடருமாறு அறிவுறுத்தி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ள வந்த விபரத்தை தெரிவித்து, சோதனை மாலை 17.00 மணிக்கு தொடங்கப்பட்டது.

இந்த அலுவலகமானது வடக்கு பார்த்த நுழை வாயிலுடன் தரை மற்றும் முதல் தளத்துடன் உள்ளது. அதில் தரைத்தளத்தின் மத்தியில் நகராட்சி ஆணையர் அலுவலக அறை வடக்கு பார்த்தவாறு 16x20 அடி அளவு கொண்டதாக இருந்தது. அந்த அறையில் தென்மேற்கு மூலையில் வடக்கு பார்த்தவாறு ஒரு இரும்பு பீரோவும், அதற்கு அருகே ஒரு ஸ்டீல் டேபிளும் போடப்பட்டிருந்தது. மேற்படி அறையின் மேற்கு சுவரோரம் மத்தியில் ஒரு Executive டேபிள் ரோலிங் சேருடன் கிழக்கு பார்த்தவாறு போடப்பட்டிருந்ததில் நகராட்சி ஆணையர் திரு.C.வெங்கடாசலபதி அவர்கள் அவரது இருக்கையில் அமர கேட்டுக்கொண்டதன் பேரில் அவர் அவரது இருக்கையில் அமர்ந்து கொண்டார். அவரது இருக்கைக்கு வலுது புறம் இருந்த கம்யூட்டர் டேபிளின் மீது தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு தொடர்பான சட்ட புத்தகங்களும் கோப்புகளும் இருந்தது. அதன்பிறகு, மேற்படி அறையில் இருந்த இரும்பு பீரோவை சோதனை செய்தபோது அதில் படிவங்களும், புத்தகங்களும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதன்பிறகு, நகராட்சி ஆணையரின் Executive டேபிளை சோதனை செய்தபோது அதில் கைப்பற்றக்கூடிய பொருட்கள் மற்றும் ஆவணங்கள் ஏதும் காணப்படவில்லை. நகராட்சி ஆணையர் திரு.C.வெங்கடாசலபதி அவர்கள் தான் புகளூர் நகராட்சி ஆணையராக கடந்த 17.06.2026 முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அதன்பிறகு மேற்படி நகராட்சி ஆணையர் திரு.C.வெங்கடாசலபதி அவர்கள் வைத்திருந்த கமிஷன் தொகை ரூ.40,000/-த்தை விசாரணைக்காக கைப்பற்றினேன். அவரை விசாரித்து அவரிடம் வாக்குமூலம் தனியாக பெறப்பட்டது. இந்த சோதனையின் போது மேற்படி நகராட்சி ஆணையரை சந்திப்பதற்காக அலுவலகம் வந்த திரு.A.சூரியக்குமார், த/பெ.ஆறுமுகம், நந்தவனத்தெரு, வேலாயுதம்பாளையம், புகளூர் வட்டம் என்பவரை சோதனை செய்தபோது

அவர் தனது பேண்ட்டின் வலது பக்க பின்புற பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.15,000/- (500x30) பற்றி கேட்டபோது அவர் நகராட்சி அலுவலக செலவிற்கு கொடுப்பதற்காக கொண்டு வந்ததாகவும், சம்பளம் கொடுக்க கொண்டுவந்ததாகவும் முன்னுக்கு பின் முரணாக சொன்னதால் அந்த தொகை ரூ.15,000/-ஐ விசாணைக்காக கைப்பற்றினேன். அவரை விசாரித்தது அவரிடம் வாக்குமூலம் தனியாக பெறப்பட்டது.

மேற்படி நகராட்சி ஆணையர் அறைக்கு மேற்கு பக்கம் நகர் மன்ற தலைவர் அறையும், அந்த அறைக்கு வடமேற்கு திசையில் தெற்கு பார்த்தவாறு பார்வையாளர் காத்திருப்பு அறையும், அந்த அறையை ஒட்டினாற்போல் கிழக்கு திசையில் பொறியாளர் பிரிவும், அதற்கு அடுத்து கணினி பிரிவும், அதற்கு அடுத்து பதிவு அறையும், அதற்கு அடுத்து நகரமைப்பு பிரிவும் வரிசையாக அமைந்துள்ளது. மேலும் நகராட்சி ஆணையர் அறையின் கிழக்கு பக்கம் வருவாய் பிரிவு அலுவலக அறை அமைந்துள்ளது. மேலும், தரைத்தளத்தின் கிழக்கு பகுதியில் பொதுப்பிரிவு மற்றும் பொறியியில் பிரிவு அறைகளும் எதிரெதிரே காணப்பட்டது. இந்த சோதனையின் போது, மேற்படி அறைகளில் பணியில் இருந்த கீழ்க்கண்ட அலுவலர்களை சோதனை செய்ததில், அவர்கள் வைத்திருந்த தொகைகள் பின்வருமாறு.

1.	திரு.N.தயாநிதி, இளநிலை உதவியாளர்	620/-
2.	திருமதி.K.பூஜா,இளநிலை உதவியாளர்	360/-
3.	திருமதி.S.கீதா, அலுவலக உதவியாளர்	310/-
4.	திருமதி.S.ஜெயலெட்சுமி, கணக்காளர்	535/-
5.	செல்வி.V.மலர்கொடி, நகராட்சி பொறியாளர்	200/-
6.	திரு.S.கார்த்திக், அலுவலகக்காவலர் (நகராட்சி ஆணையரின் அரசு வாகன ஓட்டுநர்)	830/-

மேற்படி அலுவலர்கள் வைத்திருந்த தொகைகள் அவரது சொந்த பணம் என்றும் செலவுக்காக வைத்திருந்ததாகவும் சொன்னதால் மேற்படி தொகைகளை அலுவலர்கள் வசமே திருப்பி ஒப்படைத்தேன். மேலும், இந்த சோதனையின் போது அலுவலகம் வந்த திரு.சுரேஷ்குமார், த/பெ.சுப்புராமன், துப்புரவு பணியாளர் / எலக்ட்ரிசியன் புகளூர் நகராட்சி அலுவலகம் என்பவரின் சோதனை செய்தபோது அவரது பேண்ட்டின் வலது பக்க முன்புற பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.2,000/- (500x4) பற்றி கேட்டபோது அவர் முன்னுக்கு பின் முரணாக சொன்னதால் அந்த தொகை ரூ.2,000/-ஐ விசாரணைக்காக கைப்பற்றினேன். அவரை விசாரித்து அவரிடம் வாக்குமூலம் வாக்குமூலம் தனியாக பெறப்பட்டது. அதன்பிறகு கட்டிட அனுமதி, மனைப்பிரிவு ஒப்புதல் சம்மந்தமாக ஆன்லைன் மூலம் அல்லது நேரடியாக பெறப்பட்ட மனுக்கள் ஏதேனும் நிலுவையில் உள்ளதா என்று உதவிபொறியாளர் செல்வி.மலர்க்கொடி என்பவரை கேட்டபோது, அவர் புகளூர் நகராட்சி ஆணையர் திரு.C.வெங்கடாசலபதி அவர்களின் லாகின் ஐடியில் 25.07.2026 அன்று நிலுவையில் உள்ள தொழில் வரி, புதிய வீட்டு

வரி நிர்ணயம் செய்தல், தொழில் உரிமம் வழங்குதல் போன்ற பணிகளுக்காக 154 விண்ணப்ப கோப்புகள் நிலுவையில் உள்ளதாக தெரிவித்து அலுவலக கணினியில் இருந்து மேற்கண்ட விபரங்களை பிரிண்ட் எடுத்து கொடுத்ததை கைப்பற்றினேன். மேலும் இந்த நடவடிக்கையின்போது, புகளூர் நகராட்சி ஆணையர் அலுவலக உட்புற பணியாளர்களின் வருகைப்பதிவேடு-2026 பார்வையிட்டபோது 25.07.2026 சனிக்கிழமை அரசு விடுமுறை என்று எழுதப்பட்டிருந்து. மேற்படி ஜீலை 2026 மாதத்தின் வருகை பதிவேட்டின் சான்றொப்பமிட்ட நகலினை கைப்பற்றினேன். அதன்பிறகு புகளூர் நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணம் தினசரி கையிருப்பு பதிவேட்டை பார்வையிட்டபோது அதில் 24.07.2026 வரை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அலுவலகம் வந்தபோது பணம் வைத்திருந்த விபரங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் 25.07.2026 அன்று மேற்படி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சனிக்கிழமை அலுவலக விடுமுறையாக இருந்தும் அலுவலகம் வந்தபோது தாங்கள் பணம் வைத்திருந்த விபரங்களை மேற்படி பதிவேட்டில் பதிவு செய்யவில்லை. மேற்படி பணம் தினசரி கையிருப்பு பதிவேட்டின் சான்றொப்பமிட்ட நகலினை கைப்பற்றினேன். மேலும், புகளூர் நகராட்சி ஆணையர் அறிவுறுத்தியதன் பேரில் அவரது அலுவலக H-1 மற்றும் A-1 பிரிவு கணக்காளர் திருமதி.V.ஜெயலெட்சுமி என்பவர் மூலம் ஆஜர் செய்த கொடிநாள் நிதி இலக்கு 2025 ஆம் ஆண்டிற்கு ரூ.3 லட்சம் கொடிநாள் நிதி இலக்கும் மற்றும் ரூ.3000/- காசநோய் வில்லை நிதி இலக்கும் நிர்ணயம் செய்யப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் உத்தரவிடப்பட்ட ஆவணங்களின் சான்றொப்பமிட்ட நகலினை கைப்பற்றினேன். மேலும், புகளூர் நகராட்சி ஆணையர் அலுவலகத்தில் நிலுவையில் உள்ள மொத்த கோப்புகளின் பட்டியலை திருமதி.ஜெயலெட்சுமி, கணக்காளர் அலுவலக கணினியில் இருந்து ஆன்லைன் மூலம் பிரிண்ட் எடுத்து கொடுத்த சான்றொப்பமிட்ட நகலினை கைப்பற்றினேன். திடீர் சோதனை நடவடிக்கை, அலுவலக ஆவணங்களுக்கோ, அலுவலர்களுக்கோ எந்தவித சேதாரமும், தொந்தரவுமின்றி நடத்தி முடிக்கப்பட்டது. தொடர்ந்து காவல் ஆய்வாளர் அவர்களின் அறிவுரையின் பேரில் கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து எடுத்துவரப்பட்ட மடிக்கணினி மற்றும் பிரிண்டர் மூலம் மாலை 17.00 மணி முதல் 21.00 மணி வரை காவல் ஆய்வாளர் அவர்கள் சொல்லச் சொல்ல தலைமை காவலர் 1619 திரு.லோகநாதன் அவர்களால் புகளூர் நகராட்சி ஆணையர் அலுவலக அறையில் வைத்து தட்டச்சு செய்து தயார் செய்யப்பட்டது. அதில் நானும், காவல் ஆய்வாளர் திரு.K.சாமிநாதன், புகளூர் நகராட்சி ஆணையர் திரு.C.வெங்கடாசலபதி ஆகியோர் பக்கத்திற்கு பக்கமும், திரு.சுரேஷ் குமார், துப்பரவு பணியாளர் / எலக்ட்ரிசியன், திரு.சூரியகுமார், த/பெ.ஆறுமுகம், செல்வி.மலர்க்கொடி, உதவிப்பொறியாளர், திருமதி.பூஜா, இளநிலை உதவியாளர், திருமதி.ஜெயலட்சுமி, கணக்காளர், திரு.தயாநிதி, இளநிலை

உதவியாளர், திருமதி.கேத்ரின், டேட்டா எண்ட்ரி ஆபரேட்டர் மற்றும் திரு.கார்த்திக், அலுவலக காவலர் / வாகன ஓட்டுநர் ஆகியோர் கடைசி பக்கமும் கையொப்பம் செய்தோம். மேற்படி திடீர் இணை ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.57,000/- மற்றும் மேற்குறிப்பிட்ட கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து தங்களிடம் ஒப்படைக்கின்றேன். உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, தங்கள் உண்மையுள்ள Sd/- XXXXXXXXXX திரு.G.பாலமுருகேசன், வருவாய் ஆய்வாளர், மண்மங்கலம் பிர்கா, மண்மங்கலம் வட்டம், கரூர் மாவட்டம். நாள்.26/07/2026.

Sir, Received the Computer typed complaint on 26.07.2026 at about 14.00 hrs, after getting suitable instructions form the superior officers and law officers of DVAC, Chennai, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.05/AC/2026 u/s 7, 7 r/w 12 of The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 and u/s 106 of BNSS 2023 at 14.30 hrs on 26.07.2026. Sd/- (XXXXXXXXXX) 26.07.2026 K.Saminathan, Inspector of Police, V & AC, Karur.

Original FIR along with the original computer typed complaint of Tr.G.Balamurugesan, Revenue Inspector, Manmangalam Firka, Manmangalam Taluk, Karur District are submitted to the Hon'ble Principal District and Sessions Judge / Special Court, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

26/7/26

(K.Saminathan)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.